கலைஞர் 100
1924 - 2023 கூட்டுறவுத் துறை

அனுப்புநர்

டாக்டர். என்.சுப்பையன், இ.ஆ.ப.,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
எண்.170, ஈவெரா பெரியார் சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை – 10.
தபால் பெட்டி எண்.1037.

பெறுநர்

1. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, சென்னை.
2. கூடுதல் பதிவாளர்,
   சென்னை மண்டலம்
3. மேலாண்மை இயக்குநர்கள்,
   அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகள்.
4. அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள்

ந.க எண் 67381 / 2023 / மவகொ1 நாள் 09.01.2024
மார்கழித் திங்கள் 24ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு, 2054

ஐயா / அம்மையீர்,

பொருள் : கூட்டுறவு – கூட்டுறவு வங்கிகள் / சங்கங்கள் மூலம் பல்வேறு வகைக் கடன்கள் வழங்குதல் –கடன்களின் உச்சவரம்பினை உயர்த்துதல் – தொடர்பாக

பார்வை

1. பதிவாளர் கடிதம் ந.க.85444/2017 மவகொ1 நாள் 19.12.2017
2. பதிவாளரின் சுற்றறிக்கை எண் 01/2018(ந.க.44973/2016 மவகொ1), நாள் 15.03.2018
3. பதிவாளரின் சுற்றறிக்கை எண் 11/2019 (ந.க.43449/2016 மவகொ1), நாள் 11.07.2019
4. பதிவாளரின் செயல்முறை ஆணை ந.க.57903/2019 நவ1, நாள் 10.09.2019.
5. ஈரோடு மத்தியக் கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் கடிதம் ந.க.010854/2001-02/வி.அ.க.4, நாள் 08.11.2023

www.Padasalai.Net

6. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் கடிதம் ந.க.25936/2022-23/L4, நாள் 03.10.2022

7. கடலூர் மத்தியக் கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் கடிதம் ந.க.2939/2008-09/என்.சி.3, நாள் 26.06.2023

---

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் அனைத்து வகை கடன்களுக்கும் 2023-24ஆம் ஆண்டிற்கான குறியீட்டினை அதிகரித்து மறுநிர்ணயம் செய்து வழங்கப்பட்டது. இக்கடன் குறியீட்டினை எய்தஏதுவாக சில மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கோரிக்கையினை ஏற்று பின்வரும் கடன்களின் உச்சவரம்பு அதிகரிக்கப்படுகிறது.

(ரூ.இலட்சத்தில்)

| கடன் வகை | தற்போதைய உச்ச வரம்பு | அதிகரிக்க உத்தேசித்து உள்ள உச்ச வரம்பு | கடன் வழங்கும் சங்கங்கள் / வங்கிகள் | கடனை திருப்பி செலுத்தும் காலம் |
|---|---|---|---|---|
| நகைக் கடன் | 20.00 | 30.00 | TNSACB, TNCSARDB, CCB, PACCS, UCB, UCCS, PCARDB, CMS, LAMPS, ECS | 12 மாதங்கள் (மாற்றம் இல்லை) |
| சம்பளக் கடன் | 7.00 | 15.00 | TNSACB, CCB,UCB,UCCS | 120 மாதங்கள் (முன்பு 84 மாதங்கள்) |
| சிறுவணிக கடன் | 0.50 | 1.00 | CCB, UCB, UCCS,PACCS | 350 நாட்கள் (மாற்றம் இல்லை) |

மேலும், தனிநபர் பிணையத்தின் அடிப்படையில் வழங்கும் கடன்களுக்கு பின்வரும் நிபந்தனைகள்விதிக்கப்படுகிறது.

1. ரூ.50,000/- வரையிலான தனிநபர் பிணைய கடனுக்கு ஒரு நபர் பிணையம் அளிக்க வேண்டும்.
2. ரூ.50,001/- முதல் ரூ.1,00,000/- வரையிலான தனிநபர் பிணைய கடனுக்கு இரண்டு நபர்கள் பிணையம் அளிக்க வேண்டும்.

3. பிணையம் அளிக்கும் நபர்கள் அரசு அல்லது தனியார் துறையில் சம்பளம் பெறும் பணியாளராகவும், PAN எண் உள்ளிட்ட இதர KYC ஆவணங்கள் கொண்டவராக இருக்க வேண்டும்.

இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு அறிவுரைகளை வழுவாது பின்பற்றி மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, பணியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள், கடன் வழங்குதல் தொடர்பாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளையும் பின்பற்றுமாறு தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவு நிறுவனங்களின் கிளைமேலாளர்/ செயலாளர் கடன் வழங்கும் செயல்பாடுகளை கண்காணித்து, கடன்கள் விரைவாக வசூலிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இக்கடிதத்தினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையினை மறு அஞ்சலில் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஓம்/-
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்காக

நகல் : இருப்புக் கோப்பு
நகல் : தொவேச, நவ, வேஊவ, வஆ, விச பிரிவுகள்

www.Padasalai.Net